# யூலை - 16- பொதுக்கால 15ம் வார ஞாயிறு

**"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகளுக்கு ஒப்பானோர் இறைவார்த்தையைக் கேட்டுப் புரிந்து கொள்வார்கள்." (மத்.13:23)**

## முதல் வாசகம்: ஏசாயா 55 : 10 - 11

மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன் அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை.

**பதில்பாடல் :** நல்ல நிலத்தில் விழுந்த விதைகளே விளைச்சலைக் கொடுத்தன

## இரண்டாம் வாசகம் : உரோமையர் 8 : 18 – 23

சகோதர சகோதரிகளே! இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என நான் எண்ணுகிறேன்.இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது.ஏனெனில், படைப்பு பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது தானே விரும்பியதால் அப்படி ஆகவில்லை அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அவ்வாறு ஆயிற்று எனினும் அது எதிர்நோக்கை இழந்த நிலையில் இல்லை.அது அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும் விடுதலையையும் தானும் பெற்றுக்கொள்ளும் என்கிற எதிர்நோக்கோடு இருக்கிறது.இந்நாள்வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாம் அறிவோம்.படைப்பு மட்டும் அல்ல் முதல் கொடையாகத் தூய ஆவியைப் பெற்றுக் கொண்டுள்ள நாமும் கடவுள் நம்மைத் தம் பிள்ளைகளாக்கப்போகும் நாளை, அதாவது நம் உடலை விடுவிக்கும் நாளை எதிர்நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம்.

## நற்செய்தி : மத்தேயு 13: 1 – 9 (குறுகிய வாசகம்)

அக்காலத்தில் இயேசு வீட்டிற்கு வெளியே சென்று கடலோரத்தில் அமர்ந்தார்.மக்கள் பெருந்திரளாய் அவரிடம் ஒன்றுகூடி வந்தனர். ஆகவே அவர் படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தனர்.அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றைக் குறித்து அவர்களோடு பேசினார்" விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார்.அவர் விதைக்கும்பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன.வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. ஆனால் கதிரவன் மேலே எழ, அவை காய்ந்து, வேரில்லாமையால் கருகிப் போயின.மற்றும் சில விதைகள் முட்செடிகளின் இடையே விழுந்தன. முட்செடிகள் வளர்ந்து அவற்றை நெருக்கிவிட்டன.ஆனால் இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும் சில அறுபது மடங்காகவும் சில முப்பது மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன.கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்" என்றார்.

**தியானம்:** பொதுக்காலத்தின் 15வது ஞாயிறுவார இறைவார்த்தைப் பகுதிகள், இறைவார்த்தைகளின் படி நாம் வாழ்வதன் மூலம் நிறைவாழ்வை அடையமுடியும் என்பதை உணர்த்துகின்றது, அதேவேளையில் இறைவார்த்தை விதையானது, எமது உள்ளங்களில் முளைவிட்டு பெரு விருட்சமாக வளரக்கூடிய வகையில் நாம் வாழ்கின்றோமா? அல்லது முட்புதராக, கற்பாறையாக, வழியோர நிலமாக நாம் வாழ்கின்றோமா? என்று சிந்திக்க எம்மை அழைக்கின்றது. இறைவனின் திருமகனே விதைப்பவர், அவரே அறுவடை செய்பவர், இதனை உறுதிப்படுத்தவே மழையும்,பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச்செய்து விதைப்பவனுக்கு விதையையும், உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே எமது வாயிலிருந்து புறபபட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளதைப் பார்க்கின்றோம். ஆதியில் யூதமக்கள் இறையரசைப்பற்றி தவறான கருத்துக்களை கொண்டிருந்தார்கள், இயேசு இறையரசின் மறைபொருளை யூதரின் தவறான கருத்துக்களை தெளிவுபடுத்துவதற்காக உவமைகள் வாயிலாக போதித்தார். இயேசுவின் போதனைகளை கேட்க திரளான மக்கள் கூடினர். இந்த சூழ்நிலையில்தான் இயேசு விதைப்பவன் உவமையைக் கூறுகின்றார். யாரெல்லாம் அவர் விதைக்கும் இறைவார்த்தையை தம் உள்ளத்தில் ஏற்று உரிய பலன் தருகின்றனரோ, அவர்கள் இறையாட்சியின் நிறைவை இறைவனோடு அனுபவிக்கின்றனர். யாரெல்லாம் இறைவார்த்தையை ஏற்காது போகின்றனரோ, அவர்கள் தங்களுக்கு தாங்களே அழிவைத் தேடிக்கொள்கின்றனர். காரணம் அவர்கள் விதைப்பவரும், அறுவடை செய்பவருமான இறைமகனின் உறவில் நிலைத்திருக்காது அவரது நட்புறவை இழந்து விடுகின்றனர். எனவேதான் இறைமகனோடு இணைந்திருப்பது எவ்வளவு அவசியமாகின்றது. நமது நிலை என்ன? சிந்திப்போம்.